மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி நேற்றே சொல்லியாகி விட்டது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : இது புதிய விஷயம். பல்வேறு துறைகளுக்கும்;

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி தீர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

3. கவன ஈர்ப்பு.

(அ) திருச்செந்தூர் வட்டம், செம்மரிக்குளம், புத்தன் தருவை கிராமங்களில் வெள்ளத்தால் ஏற்பட்ட சேதம் குறித்து.

THIRU K. P. KANDASAMY : Under Rule 41 of the Tamil Nadu Assembly Rules, I wish to call the attention of the Hon. Minister for Revenue to a matter of urgent public importance, namely, the destruction of standing crops in Semmarikulam and Puthantharuvai villages in Tiruchendur taluk by the recent floods and the consequent distress of the farmers there.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் வட்டத்தைச் சேர்ந்த புத்தன் தருவை கிராமத்தில் 1973 டிசம்பரில் பெருமழை பெய்ததன் காரணமாக 98.84 ஏக்கர் நிலங்கள் நீரில் மூழ்கின. விபரம் வருமாறு :

நன்செய்	60	76
புன்செய்	32	89
தீர்வை விதிக்கப்பட்டதாக	5	19
மொத்தம்	98	84

இதில் 59.88 ஏக்கர் பரப்பளவில் விளைந்திருந்த நெற்பயிரும், வாழையும் சேதமடைந்தன. எஞ்சிய 39.96 ஏக்கர் நிலம் தரிசாக விடப்பட்டது. நன்செய் நிலங்கள் ஒருபோக நன்செய் நிலங்களாகும். சேதம் ஏற்பட்டதன் காரணமாக

1974 ஏப்ரல் 4] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

இந்த நிலங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த அடிப்படைத் தீர்வை தள்ளுபடி செய்யப்படும். பாதிக்கப்பட்ட நிலங்களைப் பயன்படுத்துவதற்குக் கடன் கேட்டு தனிப்பட்டவர் எவரிடமிருந்தும் விண்ணப்பம் வரவில்லை.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் தள்ளுபடி செய்யக் கருதியுள்ள தொகை ரூ. 234.22 ஆகும். கடன் கேட்டு தனிப்பட்ட எவரிடமிருந்தும் விண்ணப்பம் வரவில்லை என்றும், ஆனால், கடனையும், நில வரியையும், வேளாண்மை வருமான வரியையும் வசூலிப்பதை ஒத்தி வைக்கலாமென்று புத்தன்தருவை ஊராட்சித் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். நிலவரி தள்ளுபடி செய்யப்படுவதன் காரணமாக நிலவரி குறித்துக் கேட்பு அறிவிப்பு ஏதும் அனுப்பப்பட மாட்டாது. கடன்கள், வேளாண்மை வருமான வரி ஆகியவற்றைப் பொறுத்த வரையில் இவற்றை வசூலிப்பதில் வலுக்கட்டாய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாமென சாத்தான்குளம், துணைத் தாசில்தாருக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவிட்டுள்ளார்.

புத்தன்தருவைக் கிராமத்தில் மழைக் காலங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கின் காரணமாக பயிர்கள் பொதுவாகப் பாதிக்கப்படுகின்றன என்று கூறப்படுகிறது.

இந்தச் சேதத்தை நிரந்தரமாக தடுப்பதற்காக ரூ. 7-18 லட்சம் செலவில் புத்தன்தருவை வடிகால் அடங்கல் திட்டத்தின் முதல் கட்டப் பணியை செயற் படுத்தக் கருதப்படுகிறது. மேற்சொன்ன திட்டத்தின்கீழ் புதியதோர் ஏரி அமைக்க நாங்குநேரி வட்டம், திசையன்விளை கிராமத்திலுள்ள 181.67 ஏக்கர் புன்செய் நிலத்தையும் திருச்செந்தூர் வட்டம், அரசூர் கிராமத்திலுள்ள 77.06 ஏக்கர் புன்செய் நிலத்தையும் கையகப்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இத் திட்டம் செயற்படுத்தப்பட்டால் வெள்ளக் காலத்தில் பயிர்களுக்கு மேற் கொண்டு சேதம் எதுவும் ஏற்படாது.

திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் வட்டத்தைச் சேர்ந்த செம் மரிக்குளம் கிராமத்தில் 289.53 ஏக்கர் நிலம் வெள்ளத்தில் மூழ்கியது; 208.05 ஏக்கர் நிலத்திற்கு ரூ. 1,050 வரி தள்ளுபடி வழங்குவது குறித்து தூத்துக்குடி மாவட்ட உதவி ஆட்சித் தலைவர் பரிசீலித்து வருகிறார். 89 பட்டாதார்களுக்கு சொந்தமான நிலங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த நிலங் களைப் பண்படுத்துவதற்கு அவர்களில் எவரும் கடனும், நிதியுதவியும் கேட்க வில்லை. அடுத்த பயிர் சாகுபடியின்போது மட்டுமே அவர்களுக்கு நிதி உதவி தேவைப்படலாம் என்று மாவட்ட ஆட்சித்தலைவருக்குத் தெரியவருகிறது.

அடுத்த பயிர் சாகுபடியின்போது கடன் கேட்டு அவர்கள் விண்ணப்பம் செய்துகொண்டால் அவர்களது வேண்டுகோள் மாவட்ட ஆட்சித் தலைவரால் பரிசீலிக்கப்படும்.

இந்த வகையில் புத்தன்தருவை ஊராட்சித் தலைவரிடமிருந்தும், தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. பி. கந்தசாமி அவர்களிடமிருந்தும் வரப் பெற்ற முறையீடு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. பி. கந்தசாமி : தலைவரவர்களே, கடந்த டிசம்பரில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் செம்மரிக்குளம் கிராமத்தில் உள்ள படுகையிலுள்ள ஏறத்தாழ 80 பம்பு செட்டுகள் தண்ணீர்ப் பெருக்கு ஏற்பட்டதன் காரணமாக மோட்டார் பம்பு செட்டுகளை நீக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. ஆகையினாலே தண்ணீருக்குள்ளே இருந்து அவை கெட்டுப்போய்விட்டன. இதையொட்டி அந்த விவசாயிகளுக்குப் பஞ்சாயத்து யூனியன், நிலவள வங்கி அல்லது விவசாய நாணயச் சங்கங்கள் கடன்களை ஓராண்டு ஒத்தி வைப்பது மட்டுமின்றி பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏதாவது வெள்ள நிவாரண உதவி செய்யப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அவர் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பார் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, on a Point of Order The floods have taken place in December 1973. But the Speaker has allowed the hon. Member to call the attention of the Hon Minister in April 1974. If we give notice of some important matters, it does not find a place and see the light of the day.

THIRU K. P. KANDASAMY : It is not an adjournment motion but it is only Call attention notice.

(ஆ) மண்ணெண்ணெய் பற்றுக்குறையால் ஏழை மக்கள் படும் அவதிகுறித்து.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஏழைகள், நடுத்தர மக்கள் தினம் உபயோகித்து வரும் மண்ணெண்ணெய் கிடைக்காமல் அவதிப்படுவதுபற்றிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை நான் மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்,